
# லைக்காவின் விண்வெளி ரகசியங்கள்




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com




# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com




வானதிக்கு நிலாவைப் பார்த்தபடித் தூங்குவது மிகவும் பிடிக்கும். அந்த வெள்ளி நிலா அவளுக்கு ஆயிரம் கதைகளைச் சொல்வது போல இருக்கும். அன்றிரவும் வானதி தன் வீட்டின் ஜன்னல் வழியாக, வட்ட நிலவைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். மெல்ல மெல்ல அவளைத் தூக்கம் தழுவியது.



திடீரென்று வானதியின் கனவில் நிலவு பெரியதாக வெடித்துச் சிதறியது! வானதி பயத்தில் அலறப் போனாள். ஆனால், அந்த நிலவுத் துகள்களுக்கு நடுவிலிருந்து ஒரு வினோதமான உருவம் குதித்து வந்தது. அது ஒரு நாய்க்குட்டி! ஆச்சரியமாக, அந்த நாய்க்குட்டி ஒரு குட்டி விண்வெளி உடை அணிந்திருந்தது! அதன் சின்னஞ்சிறு தலைக்கவசத்தில்(helmet) வானதியின் முகம் பிரதிபலித்தது.

லைக்கா (தனவு குரலில்): ஹேய்! ஹலோ வானதி குட்டி! என்னைப் பார்க்க வினோதமா இருக்கா? நான் தான் லைக்கா! அந்த விண்வெளிக்கு ராக்கெட்ல முதல்ல போன நாய்க்குட்டி! நீ நிலாவைப் பார்த்துத் தூங்கும்போது விண்வெளி எப்படி இருக்கும்னு நினைச்சியே... அதான் நான் விண்வெளியில் பார்த்த அதிசயங்களை உனக்குச் சொல்லத்தான் உன் கனவுக்குள்ள வந்திருக்கேன்! நம்புறியா?



வானதி தன் கனவில் வியப்படைந்தாள். ஒரு விண்வெளி நாய்... அவளோட கனவில்... பேசிக்கிட்டு இருக்கா! இது நம்புற மாதிரியா இருக்கு?

வானதி (கனவு குரலில், தயக்கத்துடன்): லைக்காவா நீ? நிஜமாவே விண்வெளிக்குப் போயிட்டு வந்தியா! ஆனா நீ எப்படி என் கனவுக்குள்ள வந்த? இது நிஜமா, இல்ல கனவா, எனக்குப் புரியலையே!



லைக்கா: நிஜமா இல்ல கனவானு உனக்கு சந்தேகம் இருக்கா? வானதி. (லைக்கா தன் குட்டி விண்வெளி கையுறையை நீட்டி வானதியின் கையைத் தொட்டது) வானதிக்கு மெல்லியக் குளிர்ச்சி தெரிந்தது! எப்படி இருக்கு? கொஞ்சம் நிஜம் மாதிரி இருக்கா? நான் விண்வெளியில இருந்து வந்ததால எனக்கு கனவுக்குள்ளயும் வர சக்தி இருக்கு! சரி வானதி! நான் உனக்கு விண்வெளியில பார்த்த சில பயங்கரமான, ஆச்சரியமான விஷயங்களைச் சீக்கிரமா சொல்லணும்! கேட்கத் தயாரா வானதி?



வானதி தன் தூக்கக் கலக்கத்தையும் மீறி ஆர்வமானாள். ஒரு விண்வெளி நாய்குட்டியிடம் இருந்து விண்வெளி ரகசியங்களைத் தெரிஞ்சிக்கப் போறா! இது அவளோட வாழ்நாள் கனவு மாதிரி இருக்கு!



வானதி (கனவு குரலில், ஆவலுடன்): ம்ம்.... தயார் லைக்கா! சொல்லு! நீ எப்படி விண்வெளிக்குப் போன? ராக்கெட்லயா? நான் கூட ஒரு தடவை காகிதத்துல ராக்கெட் செஞ்சு ஜன்னல்ல இருந்து விட்டேன்! அது கொஞ்ச தூரம் போயிட்டு அப்படியே கீழே விழுந்திடுச்சு! நீ போன ராக்கெட் எப்படிப் போச்சு?



லைக்கா: (சிரித்தது) காகித ராக்கெட்டா? அது ஒரு நல்ல முயற்சிதான் வானதி! ராக்கெட் நியூட்டன் கண்டுபிடிச்ச ஒரு முக்கியமான அறிவியல் விதி மூலம் தான் வேலை செய்யுது. ஒவ்வொரு வினைக்கும் (action) சமமானதும் எதிரானதுமான ஒரு எதிர்வினை (reaction) இருக்கும்னு அவர் சொன்னாரு. ராக்கெட் நெருப்பை வேகமாக் கீழத் தள்ளும்போது, அந்த எதிர்வினை ராக்கெட்டை வேகமா மேலத் தள்ளுது! புரிஞ்சுதா? நான் போன ராக்கெட் ரொம்ப ரொம்பப் பெருசு! நீ விட்ட காகித ராக்கெட் காத்துல மிதக்க முயற்சி பண்ணுச்சு, ஆனால் ஈர்ப்பு விசையால கீழ விழுந்துடுச்சு.



வானதி: ஈர்ப்பு விசையா? அது என்ன லைக்கா? ஏன் காகித ராக்கெட் கீழ விழுந்துடுச்சு?



லைக்கா: நல்ல கேள்வி கேட்ட வானதி! பூமி நம்ம எல்லாரையும் தன்னோட மையத்தை நோக்கி இழுக்கும். அதுதான் ஈர்ப்பு விசை! ஒரு பெரிய காந்தம் சின்ன இரும்புத் துண்டுகளை இழுக்குற மாதிரி! பூமி ரொம்பப் பெருசு, அதனால அதோட ஈர்ப்பு விசையும் ரொம்ப அதிகம்! காகித ராக்கெட் ரொம்ப லேசா இருக்கறதால பூமி அதை ஈர்த்துக் கீழ விழவச்சிடுச்சு! ஆனா ராக்கெட் ரொம்ப வேகமா மேலப் போறதால அந்த ஈர்ப்பு விசையைத் தாண்டி விண்ணுக்குப் போயிடும்! அது மட்டுமில்லாமல் விண்வெளியில் ஈர்ப்பு விசை இல்லை. புரிஞ்சுதா வானதி?

வானதி: ஓ! இப்ப புரியுது! அப்போ ராக்கெட்ல போக உனக்குப் பயமா இல்லையா லைக்கா? அவ்வளவு வேகமாப் போனா தலை சுத்தும்ல?



லைக்கா: கொஞ்சம் பயமாதான் இருந்துச்சு வானதி! ஆனா வெளியில பார்த்தா அவ்வளவு அழகா இருந்துச்சு தெரியுமா? பூமி ஒரு பெரிய நீலக் கலர் பந்து மாதிரி தெரிஞ்சது! விண்வெளியச் சுத்திக் கருப்பா இருந்துச்சு. அங்கக் காற்று கொஞ்சம் கூட இல்ல! அதனால விண்வெளி வீரர்கள் அந்தச் சூழலுக்கு ஏற்ற உடை அணிவாங்க. அதுக்குப் பேரு தான் விண்வெளி உடை (Space Suit)! அது நமக்கு ஆக்சிஜனைக் கொடுக்கும்.

வானதி: நீ பூமியை நீலக் கலர் பந்துன்னு சொன்னியே லைக்கா! ஏன் பூமி நீலமாத் தெரியுது? ஏ வீடு தெரிஞ்சுதா?



லைக்கா: ஆமாம் வானதி! பூமி ரொம்ப அழகா நீலமாத் தெரிஞ்சுது! அதுக்குக் காரணம் பூமியில நிறையத் தண்ணீர் (கடல்கள், ஏரிகள், ஆறுகள்..) இருக்குறதுதான்! அதனால தான் விண்ணில இருந்து பார்க்கும்போது பூமி நீலக் கலர்ல தெரியும்! உன் வீடு கூட ரொம்பச் சின்னதா ஒரு பொட்டு மாதிரித் தெரிஞ்சுது! அதுக்கு மேல ஒரு சின்ன வெள்ளை மேகம் போயிட்டு இருந்துச்சு! பார்க்குறதுக்கு ரொம்ப அதிசயமா இருந்துச்சு!




வானதி: அப்படியா! வானத்துல இத்தனை நட்சத்திரங்கள் மின்னுதே... அதுங்க எப்படி இருக்கும்? நம்ம வீட்டுல இருக்கிற எல்.இ.டி பல்பு (LED Bulb) மாதிரி இருக்குமா?

லைக்கா: (சிரித்து) எல்.இ.டி பல்பு (LED Bulb) மாதிரி இருக்குமா? அதுங்க நம்ம பூமியில இருந்து ரொம்பத் தூரத்துல இருக்குறதாலதான் சின்னச் சின்னதாத் தெரியுது! ஆனா நிஜத்துல ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு பெரிய சூரியன் மாதிரி! சில நட்சத்திரங்கள் நம்ம சூரியனை விடப் பல மடங்கு பெரியதாவும், ரொம்ப வெளிச்சமாவும் இருக்கும்! அதுங்க எல்லாமே பெரிய நெருப்புப் பந்துகள்! அது எப்பவும் பயங்கரமான வெப்பமாகவே இருக்கும். அந்த வெப்பத்துல இருந்துதான் வெளிச்சம் வருது! பார்க்குறதுக்கு வானத்துல யாரோ நிறைய டைமண்ட் கற்களைத் தூவி விட்ட மாதிரி இருந்துச்சு!



வானதி: அப்போ ஏன் ராத்திரி மட்டும்தான் நட்சத்திரங்கள் தெரியுது? பகல்ல ஏன் தெரிய மாட்டேங்குது? அதுங்க எங்க போயிடும்?



லைக்கா: அதுங்க எங்கேயும் போகல வானதி! பகல்ல நம்ம சூரியனோட வெளிச்சம் ரொம்ப அதிகமா இருக்குறதால மத்த நட்சத்திரங்களோட வெளிச்சம் தெரியாது! ஆனா நட்சத்திரங்கள் எப்பவும் அங்கதான் இருக்கும்! சூரியன் மறைஞ்சதும் அந்த வெளிச்சம் குறைஞ்சதும் நட்சத்திரங்களோட ஒளி நமக்குத் தெரிய ஆரம்பிக்கும்! இது ஒரு பெரிய "ஒளி விளையாட்டு" மாதிரி! நீ ஒரு டார்ச் லைட்ட (Tarch light) பகல்ல போட்டா வெளிச்சம் தெரியாதுல? இருட்டுல போட்டாதான் தெரியும்! அது மாதிரிதான்!

வானதி: ஓ! அப்படியா விஷயம்? அப்போ அந்த நட்சத்திரங்கள் எல்லாம் எவ்வளவு தூரத்துல இருக்கும் லைக்கா? அதுங்க கிட்ட நடந்தே போக முடியுமா?



லைக்கா: (சிரித்து) நடந்து போறதுக்கு? நீ ஒரு ஆயிரம் ஜென்மம் எடுத்தாலும் போய்ச் சேர முடியாது வானதி! நட்சத்திரங்கள் நம்மப் பூமியில இருந்து ரொம்ப ரொம்பத் தூரத்துல இருக்கு! அந்தத் தூரத்தை அளக்க "ஒளி ஆண்டு"ன்னு ஒரு அளவைப் பயன்படுத்துவாங்க! ஒரு வருஷத்துல ஒளி எவ்வளவு தூரம் போகுமோ அதுதான் ஒரு ஒளி ஆண்டு! அந்த தூரம்லாம் நினைச்சுப் பார்த்தாலே தலை சுத்தும்! ராக்கெட்ல போனா கூட ரொம்ப வருஷம் ஆகும்! ஆனா விஞ்ஞானிகள் இன்னும் வேகமான ராக்கெட்டுகளைக் கண்டுபிடிக்க முயற்சி பண்ணிட்டு இருக்காங்க!

வானதி: ஒளி ஆண்டு அப்படினா என்ன லைக்கா? அத எப்படிக் கணக்கிடுவாங்க?

லைக்கா: ஒளி ஒரு வினாடிக்கு சுமார் 299,792.458 கி.மீ. வேகத்துல போகும். இதை சுருக்கமா 3 லட்சம் கி.மீ./வினாடின்னு சொல்லலாம். ஒரு சாதாரண வருஷத்துல 365 நாட்கள் 31,536,000 வினாடிகள். ஒரு ஒளியாண்டு = ஒளியின் வேகம் X ஒரு வருஷத்துல இருக்கிற மொத்த வினாடிகள்.

(300,000 கி.மீ. X 31,536,000 வினாடிகள்)

ஒரு ஒளியாண்டு ≈ 9,460,730,472,580.8 கிலோமீட்டர்கள்.

வானதி: ஓ அப்படியா! சரி லைக்கா நீ நிலாவையும் பார்த்தியா? அது எப்படித் தெரிஞ்சது? நம்மப் பூமியில இருந்து பார்க்குற மாதிரி வெள்ளையா, வட்டமா தெரிஞ்சதா? அங்க என்னெல்லாம் இருந்துச்சு?





லைக்கா: ஆமாம் வானதி ! நிலாவும் ஒரு பெரிய பந்து மாதிரிதான் இருந்துச்சு ! ஆனா அது நீலமா இல்லாம சாம்பல் நிறத்துல இருந்துச்சு. அதுல நிறைய பள்ளங்களும் மேடுகளும் இருந்துச்சு. நம்மப் பூமியில இருக்கிற மலைகள் மாதிரி ! ஆனா நிலால காற்று சுத்தமா இல்ல. அதனால அங்க யாரும் சத்தம்போட்டுப் பேச முடியாது. பேசினா கூட யாருக்கும் கேட்காது ! நிலாவுக்குச் சொந்தமா வெளிச்சம் இல்ல வானதி ! அது சூரியனோட வெளிச்சத்தை வாங்கித்தான் நமக்கு இரவில வெளிச்சமா இருக்கு. அதனாலதான் ஒவ்வொரு நாளும் நிலாவோட வடிவம் மாறுது. சில நாள் முழு வட்டமாத் தெரியும், அத நாம பௌர்ணமினு சொல்லுவோம். சில நாள் அரை வட்டமாத் தெரியும், அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக் குறைஞ்சு அது தெரியாமலே போயிடும், அத அமாவாசைனு ! சொல்லுவோம்.

வானதி: நிலால பள்ளங்களும் மேடுகளும் இருக்கா? ஏன் லைக்கா? அங்க யாரு தோண்டி இருப்பாங்க?





லைக்கா: (சிரித்து) அங்க யாரும் தோண்டல வானதி! ரொம்ப காலத்துக்கு முன்னாடி விண்வெளியில இருந்து நிறைய பெரிய பெரிய கற்கள் வந்து நிலாவோட பயங்கரமா மோதிடுச்சு! அந்த மோதல்லதான் அந்தப் பள்ளங்களும் மேடுகளும் உருவாச்சு! அந்தக் கற்களுக்கு பேருதான் விண்கற்கள்! நம்ம பூமியிலயும் சில சமயம் விண்கற்கள் விழும்! ஆனா அதுங்க பூமியோட வளிமண்டலத்துல உராய்ஞ்சு எரிஞ்சு சாம்பலாகிடும்! இப்படி நடக்குறத தான் "வால் நட்சத்திரம்னு சொல்றோம்!

வானதி: அப்படியா! அப்போ விண்கற்கள் எல்லாம் பயங்கரமானதா லைக்கா? ராக்கெட்ல போகும்போது ஏதாவது விண்கல் உன் மேல விழுந்துடுச்சா?





லைக்கா: அதப் பார்க்கும் போது கொஞ்சம் பயமாத்தான் இருந்துச்சு வானதி! ஆனா ராக்கெட்டை ரொம்ப ஸ்ட்ராங்கா செஞ்சிருப்பாங்க! அதுவும் இல்லாம ராக்கெட் போற வழியில விண்கற்கள் எதுவும் வருதான்னு விஞ்ஞானிகள் எப்பவும் கவனிச்சுக்கிட்டே இருப்பாங்க! ஒரு தடவை நம்ம ராக்கெட் ஒரு "விண்கல் மழை"க்குள்ள மாட்டிக்குச்சு! கற்கள் எல்லாம் "டமார் டமார்"னு ராக்கெட்ல மோதிடுச்சு! பார்க்குறதுக்கு வானத்துல யாரோ நிறைய சின்னச் சின்னக் கற்களைத் தூவி விட்ட மாதிரி இருந்துச்சு! ஆனா ராக்கெட்டுக்கு எதுவும் ஆகல! அது ஒரு பெரிய சவாலான பயணமா இருந்தது.

வானதி: நீ நிலாவையும் நட்சத்திரத்தையும் விண்கற்களையும் பார்த்தது ரொம்ப ஆச்சரியமா இருக்கு லைக்கா ! அங்க வேற கிரகங்கள் இருந்ததா? நீ அங்க போனியா? அங்க யார் எல்லாம் இருந்தாங்க?







லைக்கா: வானதி ! வானதி ! கொஞ்சம் பொறுமை. விண்வெளிப் பற்றி நீ தெரிஞ்சுக்க எவ்வளவு ஆர்வமா இருக்கனு உன் கேள்விகளில் தெரியுது.

வானதி: ஆமாம்.. ஆமாம்... நீ சொல்?

லைக்கா: வானதி ! நான் நிறைய வினோதமான கிரகங்களைப் பார்த்தேன் ! ஒரு கிரகம் முழுக்க முழுக்க சாக்லேட்டால ஆனது ! சாக்லேட் மலைகள், சாக்லேட் ஆறுகள், வீடுகூட சாக்லேட்லதான் கட்டி இருந்தாங்க ! அங்க மழை பெய்யும்போது கூட சாக்லேட் தூள்தான் விழும்னு சொன்னாங்க !





வானதி: சாக்லேட் கிரகமா? நிஜமாவா லைக்கா சொல்ற? அப்போ நீ நிறைய சாக்லேட் சாப்பிட்டியா? எனக்குக் கொஞ்சம் கொண்டு வந்திருக்கியா?



லைக்கா: (சிரித்து) சொல்லவா வேணும் வானதி! நான் எல்லாத்தையும் கொஞ்சம் கொஞ்சம் டேஸ்ட் பண்ணிப் பார்த்தேன்! ஆனா நிறைய சாப்பிட்டா வயிறு வலிக்கும்னு விண்வெளி வீரர்கள் சொன்னாங்க! உனக்குக் கொண்டு வர முடியலையேன்னு ரொம்ப வருத்தமா இருக்கு! ஆனா அந்த சாக்லேட் வாசனை இருக்கே... அப்படியே மயக்கிடும்! அந்தக் கிரகத்துல வானம் கூடப் பிரவுன் கலர்ல இருந்ததுனு நினைக்கிறேன்!

வானதி: பரவாயில்ல லைக்கா! நீ பார்த்ததே எனக்கு சந்தோஷம்! வேற என்ன வினோதமான கிரகம் பார்த்த?



லைக்கா: அப்புறம் ஒரு அழகான கிரகம் முழுக்க முழுக்க பூக்களால ஆனது! விதவிதமான வண்ணங்கள் மற்றும் விதவிதமான வாசனைல பூக்கள் பூத்திருந்துச்சு! அந்தக் கிரகத்துக்குப் பேரு "பூக்கள் கிரகம்"! அங்க வானம் வானவில் வண்ணத்துல இருந்துச்சு! அந்தக் கிரகத்துல பூக்கள் எல்லாம் பேசும் தெரியுமா? என்கிட்ட வந்து என் விண்வெளி உடை அழகா இருக்குன்னு சொன்னது.

வானதி: பேசுற பூக்களா? நிஜமாவா லைக்கா? என்ன சொன்னாங்க? அவங்க எப்படிப் பேசுனாங்க?




லைக்கா: ஆமாம் வானதி ! பூக்கள் மெல்லிய, தேன் மாதிரி இனிமையா பேசுனாங்க ! சில பூக்கள் பாட்டு கூடப் பாடும் ! ஒரு சிவப்புக் கலர் ரோஜாப் பூ என்கிட்ட வந்து "நீ ரொம்பத் தைரியமான நாய்க்குட்டி ! இவ்வளவு தூரம் தனியா வந்திருக்கியே !"ன்னு சொல்லுச்சு ! எனக்கு அப்போ ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு !

வானதி: பேசுற பூக்கள், சாக்லேட் கிரகம்... இதெல்லாம் ரொம்ப ஆச்சரியமா இருக்கு லைக்கா! நீ விண்வெளியில ஏலியன் பார்த்தியா?



லைக்கா: ஆமாம் வானதி! நான் ஏலியன் பார்த்தேன்.

வானதி: என்ன சொல்ற லைக்கா? உண்மையாவா? அவுங்க என்ன செஞ்சிகிட்டு இருந்தாங்க?

லைக்கா: நான் அங்க ஒரு விண்வெளிப் பள்ளிக்கூடம் பார்த்தேன்! அது ஒரு பெரிய மிதக்கும் விண்கலம் மாதிரி இருந்துச்சு! அங்க நிறைய விதவிதமான ஏலியன் குழந்தைகள் ரொம்ப சந்தோஷமா, ஆர்வமா படிச்சுக்கிட்டு இருந்தாங்க! சில குழந்தைகளுக்குத் தலையில ஆன்டெனா(antena) இருந்தது, சில குழந்தைகளுக்கு ரெண்டு ஜோடி கை இருந்துச்சு! அவங்க பறக்கும் சின்ன சின்ன விண்கற்களில்தான் பள்ளிக்கு வருவாங்க போவாங்க! பார்க்குறதுக்கு ஒரு பெரிய விண்வெளி விளையாட்டு மைதானம் மாதிரி இருந்துச்சு!



வானதி: அப்போ அங்க என்ன பாடம் சொல்லிக் கொடுப்பாங்க லைக்கா? நம்ம பள்ளி மாதிரிதான் இருக்குமா?

லைக்கா: கொஞ்சம் வித்தியாசமா இருக்கும்னு நினைக்கிறேன் வானதி! அவங்க "விண்கல் கணக்கு", "நட்சத்திர வரைபடம்", "கிரகங்களின் வரலாறு" இது மாதிரியான பாடங்களெல்லாம் படிப்பாங்க போல! ஒரு தடவை நான் ராக்கெட்டோட ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தேன். ஒரு ஏலியன் டீச்சர் வித்தியாசமான கிரகங்களைப் பற்றி சொல்லிக்கிட்டு இருந்தாங்க! அவுங்க என்ன பார்த்துட்டாங்க. நான் உடனே கீழ ஒழிஞ்சிக்கிட்டேன்.



வானதி: விழுந்து விழுந்து சிரித்தாள். சரி சரி, நீ அங்க யாருகிட்டயாவது பேச முயற்சி செஞ்சியா?

லைக்கா: ஆமாம் வானதி! அங்க ஒரு குட்டி ஏலியன் பையனைப் பார்த்தேன்! அவனுக்கு மூணு கண்கள் இருந்துச்சு! அவன் ரொம்ப நல்ல பையன்! அவன் அவனோட சின்ன பறக்கும் விண்கலத்துல என்ன ஒரு ரவுண்ட் கூட்டிட்டுப் போனான். விண்வெளியில அப்படியே "ஜம்"னு போறது அவ்வளவு ஜாலியா இருந்துச்சு. அவன்தான் எனக்கு விண்வெளியில கிடைச்ச முதல் ஏலியன் நண்பன்! அவனோட பேரு "ஜிக்ஸாக்"! கொஞ்சம் வினோதமா இருந்தாலும் ரொம்ப நல்லவன்!



வானதி: ஜிக்ஸாக்கா? மூணு கண்ணா? அவன் கூட என்ன பேசின லைக்கா? நம்ம பேசுற மாதிரி பேசுவானா?

லைக்கா: அவங்க கொஞ்சம் வித்தியாசமான மொழியில பேசுவாங்க வானதி! "கிளிக் கிளிக்", "பீப் பீப்"னு வினோதமான சத்ததுலப் பேசுவாங்க. ஆனா நாங்க மனசால பேசிக்கிட்டோம்னு நினைக்கிறேன்! ஏன்னா அவன் என் வாலைப் பிடிச்சு ஆட்டுனான், நான் அவனோட மூணாவது கண்ணை தடவிக் கொடுத்தேன்! நட்புன்னா மொழி தேவையில்லைன்னு அப்போ எனக்குப் புரிஞ்சுது! அவன் எனக்கு ஒரு வினோதமான விண்வெளி பிஸ்கட் கொடுத்தான்! அது சாப்பிட்டா அப்படியே காத்துல மிதக்கிற மாதிரி இருக்கும்!





திடீரென வானதி கண் விழித்தாள். அவளுடைய அறை வெளிச்சமாக இருந்தது. சூரியன் ஜன்னல் வழியாக ஒளி வீசிக் கொண்டிருந்தது.

நேற்று இரவு லைக்கா சொன்ன விண்வெளி அதிசயங்கள் எல்லாம் அவளுக்குக் கனவு மாதிரி இருந்தது. ஆச்சரியமாகவும் வினோதமாகவும் இருந்தது.

முதலில் லைக்கா பேசுச்சா? இதில் எப்படி நட்சத்திரங்கள் பேசும், சாக்லேட் கிரகம், பூக்கள் கிரகம் எல்லாமே ரொம்பவும் நம்ப முடியாத மாதிரி இருக்குது.

வானதி படுக்கையில் இருந்து உடனே எழுந்து தன் மடிக்கணியைத்(laptop) திறந்தாள். அவளுக்கு லைக்கா சொன்ன விஷயங்களைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்ள ஆசையாக இருந்தது. முதலில் லைக்கா யார் என்று பார்க்க இணையத்தில் தேடினாள்.



அவள் திரையில் பார்த்த தகவல் அவளை ஆச்சரியத்தில் உறைய வைத்தது. லைக்கா ஒரு ரஷ்ய விண்வெளி நாய்! அது 1957 ஆம் ஆண்டு ஸ்புட்னிக் 2 விண்கலத்தில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் உயிரினம். ஆனால், விண்கலத்தில் ஏற்பட்ட வெப்பம் காரணமாக அது உயிரிழந்தது. அது பூமிக்குத் திரும்பி வரவில்லை.

வானதிக்கு லைக்கா பற்றிப் படித்தது வருத்தமாக இருந்தது. அவளுடைய கனவில் வந்த அந்த விண்வெளி நாய்க்குட்டி உண்மையில் ஒரு சோகமான கதையின் நாயகியாக இருந்திருக்கிறது.

அடுத்து, வானதி லைக்கா அவளிடம் கனவில் சொன்ன விண்வெளி அதிசயங்கள் பற்றித் தேட ஆரம்பித்தாள். அவள் தேடிய ஒவ்வொரு விஷயமும் அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது. நட்சத்திரங்கள் உண்மையில் பெரிய நெருப்புப் பந்துகள், ஆனால் அவை ஒளியின் வேகத்தில் பல ஒளியாண்டுகள் தூரத்தில் இருப்பதால் சின்னதாகத் தெரிகின்றன என்பதை அவள் அறிந்தாள். நிலவு பூமியின் துணைக்கோள், அது விண்கல் மோதல்களால் ஏற்பட்ட பள்ளங்களைக் கொண்டுள்ளது என்பதையும், சூரிய ஒளியைப் பிரதிபலிப்பதால் தான் அது பிரகாசிக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டாள்.





சாக்லேட் கிரகம் மற்றும் பேசும் பூக்கள் உள்ள கிரகம் எதுவும் உண்மை இல்லை என்பதை வானதி கண்டுபிடித்தாள். லைக்கா சொன்னதெல்லாம் கற்பனையாக இருக்கலாம் என்று அவள் யூகித்தாள்.

வானதி (தனக்குள்): அப்போ லைக்கா சொன்னதெல்லாம் பொய்யா? விண்வெளியில இதெல்லாம் இல்லையா? ஆனா என் கனவுல அது எவ்வளவு நிஜமாத் தெரிஞ்சுது!

வானதிக்குக் கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. ஆனால், அதே நேரத்தில் விண்வெளி பற்றிய உண்மையான அறிவியல் தகவல்களை அறிந்து கொண்டதில் சந்தோஷமும் இருந்தது. விண்வெளி உண்மையில் எவ்வளவு பெரியது, அதில் இன்னும் எவ்வளவு மர்மங்கள் ஒளிந்திருக்கின்றன என்பதை நினைத்து அவள் ஆச்சரியப்பட்டாள்.






ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். சூரியன் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருந்தது. பறவைகள் கீச்சிட்டன. பூக்கள் மெதுவாக அசைந்தன. பூமி எவ்வளவு அழகானது என்பதை அவள் உணர்ந்தாள். அதே நேரத்தில் விண்வெளியின் பரந்தத் தன்மையும் அவளை வியக்க வைத்தது.

வானதி புன்னகைத்தாள். லைக்கா அவளுடைய கனவில் வந்து சொன்ன விண்வெளி ரகசியங்கள் ஒரு அழகான கற்பனையாகவும், அதே நேரத்தில் விண்வெளி பற்றிய அறிவைத் தூண்டும் விதமாகவும் இருந்தது என்பதை அவள் உணர்ந்தாள். அவள் மீண்டும் விண்வெளி பற்றிய மேலும் சுவாரஸ்யமான தகவல்களைத் தேட ஆரம்பித்தாள். அவளுடைய விண்வெளிப் பயணம் இப்போது புத்தகங்களிலும், இணையத்திலும் தொடர்கிறது...!



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com